மாலை முரசு

பக்கங்கள் 13+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 11 வெள்ளிக்கிழமை 24.01.2025 | அதிர்வு 176

## தமிழரசுக் கட்சி பெரும் வரவேற்பு

### இந்தியாவுக்கு நன்றியும் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

உள்ள கலாசார நிலையத்தின் பெயரை மீண்டும் மாற்றியதையும் தமிழுக்கு முன்னுரிமை 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# “யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்” கடும் எதிர்ப்புக்களையடுத்து மாற்றப்பட்டது பெயர்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இந்திய நிதியுதவியில் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்துக்கு “யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்” என்று இன்று காலை பெயர்ப்பலகை பொருத்தப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி இலங்கையின் பிரதி கலாசார அமைச்சர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் அந்தக் கட்டத்துக்குத் “திருவள்ளுவர் கலாசார மையம்” என்று 03





# வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை!

(கி.வசந்தன்)

வவுனியா, சுந்தரபுரத்தில் நேற்று வியாழக்கிழமை இரவு இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்று ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுந்தரபுரம் பகுதியில் வசித்து வந்த சுந்தரலிங்கம் சுகந்தன் என்ற 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மரணமடைந்த மேற்படி நபர் கடந்த தீபாவளி தினத்தன்று தனது மாமியாரைத் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திய வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்றுவரும் நிலையில் பிணையில் 03




# "மாணவர்கள் மீதான பழிவாங்கல்களை உடன் நிறுத்து!"

# யாழ். பல்கலை மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம்






(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் 9 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடைகளை நீக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழக முன்றலில் இன்று வெள்ளிக்கிழமை முதல் மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் மாணவர்கள் தெரிவிக்கையில்,

"கடந்த மே மாதம் விஞ்ஞான பீட மாணவர்களின் கற்றல் மண்டபத்தில் மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை, மாணவர்களை மண்டபத்தினுள் வைத்து விரிவுரையாளர் ஒருவர் பூட்டிய போது விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் மண்டபக் கதவைத் திறந்து மாணவர்களை வெளியேற்றி இருந்தார். கதவைப் பூட்டை உடைத்தே திறந்ததாக குற்றஞ்சாட்டி அவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது

அதுபோன்று பல்கலைக்கழத்தினுள் இருந்த ஐந்து கல்லாசனங்களை உடைத்து எறிந்தமை தொடர்பில் கலைப்பீட பீடாதிபதியிடம் கேள்வி எழுப்பிய மாணவர்கள் ஐவருக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டது.


அதேவேளை, புதுமுக மாணவர்கள் தமது வட்ஸ் அப் குழுவில் பல்கலைக் கழகத்தில் தாம் விரும்பும் பாடங்களை கற்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்றும், கோரிக்கையை ஏற்கத் தவறினால் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என அவர்களின் குழுவில் கலந்துரையாடியுள்ளனர்.

அவ்வாறு கலந்துரையாடிய மாணவர்கள் இருவருக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. புதுமுக மாணவர்களுக்கான முதல் நாள் விரிவுரைகள் கடந்த திங்கட்கிழமையே ஆரம்பமாகியது. மாணவர்கள் பல்கலைக் கழகத்தினுள் கற்றல் நடவடிக்கைக்கு வர முதலே அவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக முதல் நாள் விரிவுரை என்பது மாணவர்களுக்கு முக்கியமான நாளாகும். அந்த நாளில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

மாணவர்களை கற்றல் மண்டபத்தினுள் வைத்து பூட்டிய விரிவுரையாளருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கல்லாசனங்களை அடித்து உடைத்தவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பல்கலைக்கழகத்தில் விரும்பிய பாடத்தைத் தெரிவு செய்வதற்கு மாணவர்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அவற்றை கேள்வி கேட்ட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதித்துள்ளார்கள்.

மாணவர்களின் நலன் சார்ந்து பேச வேண்டிய பல்கலைக்கழக மூதவை சபையோ, பேரவையோ கடந்த 8 மாதங்களுக்கு மேலாகத் தொடரும் இந்த மாணவர்களின் பிரச்சினை தொடர்பில் எந்தக் கரிசனையும் கொள்ளவில்லை என்பது மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன், மூதவை சபை மற்றும் பேரவை ஆகியவை முடங்கியுள்ளமை வேதனையை ஏற்படுத்தியுள்ளது." – என்றனர்.



# சகோதரர்களுக்கிடையில் கடும் மோதல்!

## மண்வெட்டியால் வெட்டி ஒருவர் கொலை!!

சகோதரர்களுக்கிடையிலான மோதலில் குடும்பஸ்தர் ஒருவர் மண்வெட்டியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் காலி மாவட்டம், கரந்தெனிய பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

காணி விற்பனை தொடர்பில் அண்ணனுக்கும் இரண்டு தம்பிகளுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் மோதலாக மாறியுள்ளது.

இதன்போது அண்ணன் மீது தம்பிகளில் ஒருவர் மண்வெட்டியால் வெட்டியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த அண்ணன் அயலவர்களால் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 39 வயது நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் கரந்தெனிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், உயிரிழந்தவர்களின் இரண்டு தம்பிகளையும் கைது செய்துள்ளனர்.

# ஓமந்தையில் பெண்களைத் தாக்கி தொலைபேசியைக் கொள்ளையடித்த இளைஞர்கள் இருவர் மடக்கிப் பிடிப்பு

**(கி.வசந்தன்)**

வவுனியா, ஓமந்தையில் பெண்களைத் தாக்கி 7 இலட்சம் பெறுமதியான தொலைபேசியைக் கொள்ளையடித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தை ஏ - 9 வீதியில் நேற்று மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பெண்களைப் பின் தொடர்ந்து சென்ற இளைஞர் இருவர் குறித்த பெண்களை வழிமறித்து பெண்களைத் தாக்கியதுடன் அவர்களிடம் இருந்த 7 இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசியை பறிமுதல் செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்கள் வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அவசர தொலைபேசி இலக்கமான 107 இற்குத் தொடர்பு கொண்டு முறையிட்டதை அடுத்து உடனடியாகச் செயற்பட்ட ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த இளைஞர்களை அடையாளம் கண்டு ஓமந்தை, சேமமடு பகுதியில் வைத்து துரத்திப் பிடித்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து குறித்த தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்தவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வவுனியாவில்...**

விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், மோட்டார் சைக்கிளில் நேற்று இரவு 11:30 மணியளவில் தனது வீட்டுக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோதே கூரிய ஆயுதத்தால் இவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இவரது மைத்துனர் ஈச்சங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸார் தடவியல் பொலிசாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**யாழ்ப்பாணம்...**

பெயர் மாற்றிப் பெயர் பலகையைத் திறந்து வைத்தனர்.

"யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம்" என்ற பெயர் மாற்றப்பட்டு, "திருவள்ளுவர் கலாசார மையம்" எனப் பெயர் சூட்டியமைக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல்வாதிகள், கல்வியாளர்கள் உள்ளிட்ட பல தரப்பில் இருந்தும் கண்டங்களும் விமர்சனங்களும் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், குறித்த கட்டடத்தில், இன்று வெள்ளிக்கிழமை "யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்" எனப் பெயர்ப்பலகை பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தமிழரசுக் கட்சி...**

கொடுக்கப்பட்டுள்ளதையும் வரவேற்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி, இந்தியாவுக்கு நன்றியையும் தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையமொன்று அமைக்கப்பட்டு யாழ்ப்பாண கலாசார நிலையம் என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலைமையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தியத் தூதுவர் மற்றும் இலங்கையின் அமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து இதன் பெயரை மாற்றம் செய்தனர்.

அதாவது யாழ்ப்பாணம் என்ற சொல்லைத் தூக்கிவிட்டு திருவள்ளுவர் கலாசார மையம் என்ற புதிய பெயரை அறிவித்து இருந்தனர். ஆனால், இதற்குப் பலரும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையில் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தி மீள்பலிசீலனை செய்ய வேண்டும் என்று இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் இன்றைய தினம் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையம் என்பதாக மீண்டும் பெயரை மாற்றியுள்ளனர். அதேபோல் தமிழுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டும் இருக்கின்றது.

இந்தியாவின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு நன்றி கூறி இந்தியத் தூதுவருக்குத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் கடிதமொன்றையும் இன்றைய தினம் அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புகையும் சந்ததி

இலங்கையில் புகைப்பிடிப்பவர்கள் தொடர்பாக அதிர்ச்சித் தகவல் ஒன்று - புள்ளி விவரம் ஒன்று - வெளியாகி இருக்கின்றது.

ஆண்களிடையே புகைப் பிடிக்கும் வீதம் குறைந்து வரும் அதேசமயம், பெண்களிடையே புகைப் பிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் புகைப்பிடிக்கும் இளம் பெண்களிடையே புற்றுநோய் அபாயம் அதிகரித்துள்ளது என்று குழந்தை சுவாச நோய் நிபுணர் டாக்டர் சானக டி சில்வா அபாய சங்கு ஊதி இருக்கிறார்.

மனிதர்களைப் பொறுத்தவரை சுவாசத் தொகுதி மிக முக்கியமானது. ஏனெனில் மனிதர்கள் உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் சில நாள்கள் வாழ முடியும். ஆனால் சுவாசம் இல்லாமல் வாழ முடியாது என்று சுட்டிக் காட்டுகின்றார் அவர்.

நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் உலக அளவில் இறப்புகளுக்கான ஏழாவது முக்கிய காரணியாக உள்ளது என்று சுவாச நோய்கள் தொடர்பான நிபுணர் வைத்தியர் சமன் மல்லி தலபதாடு தெரிவிக்கிறார்.

ஆனால் நுரையீரல் சம்பந்தமான அல்லது சுவாசம் தொடர்பான நோய்கள், பாதிப்புகள், அவற்றின் விளைவுகள் குறித்து சமூகத்தில் சரியான விழிப்புணர்வு இல்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

நீண்ட காலம் சிகிச்சை அளிக்கப்படாத ஆஸ்துமா அல்லது புகைப்பிடித்தல் காரணமாக இந்த சுவாச நோய்கள் மிக மோசமான கட்டத்தை அடைந்து உயிரைப் பறிக்கும் நிலை ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக மக்களுக்கு மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் 45 வயதுக்குப் பிறகு தோன்றும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின்படி 40 வயதுக்கு மேற்பட்டவர்களில் பத்து வீதமானோருக்கு இத்தகைய சுவாச நோய்ப் பாதிப்பு அதிகம் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வு இல்லை என்றும் கூறப்படுகிறது.

புகைப்பிடித்தல் பழக்கவழக்கம், காற்று மாசுபாடு, புகை நிறைந்த இடங்களில் பணியாற்றுதல் போன்றவை இத்தகைய சுவாசத் தொகுதி பாதிப்புகளை அதிகம் ஏற்படுத்துகின்றன.

கணவரின் புகைப் பிடிக்கும் பழக்கம் மனைவியின் கர்ப்பகாலத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என்கின்றனர் வைத்திய நிபுணர்கள். புகைப்பவர்களின் அருகில் உள்ளவர்கள் அந்தப் புகையை உள்ளிழுப்பதை 'இரண்டாந்தர புகை உள்ளெடுத்தல்' என்கின்றனர். அத்தகைய முறைமையினால் கர்ப்பிணி பாதிக்கப்படும் பட்சத்தில் அவருக்குப் பிறக்கும் குழந்தை எடை குறைவாகப் பிறக்கலாம். குறைப்பிரசவம் நிகழலாம். கற்றல் குறைபாடுகளுடன் அல்லது நடத்தைப் பிரச்சினைகளோடு குழந்தை பிறக்கவும் வாய்ப்புகள் உண்டு. அது மட்டுமன்றி `சிட்ஸ்' *(Sudden infant death syndrome - SIDS)* எனப்படும் மோசமான பிரச்சினைக்குக் குழந்தை உள்ளாகும் அபாயமும் உண்டு என்கின்றனர் வைத்திய நிபுணர்கள்.

'இரண்டாந்தர புகை உள்ளெடுத்தல்' போக்கே இத்தகைய பாதிப்புகளைத் தரும் என்றால் நேரடியாகப் மகளிர் புகைப்பிடித்தல் பழக்கம் அதிகரித்தால் அடுத்து வரும் மனித சந்ததியின் அவல நிலைமை சொல்லத் தேவையில்லாததாக இருக்கும்.





# தேசிய கனிஷ்ட பிரிவு ஹொக்கி அணியில் 50 வருடங்களின் பின் யாழ். மாணவன்!

(எஸ்.நிதர்ஷன்)

50 வருடங்களின் பின்னர் தேசிய கனிஷ்ட பிரிவு ஹொக்கி அணியில் யாழ்.மாவட்டத்தினை சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் எஸ். விதுசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் ஹொக்கி விளையாட்டை விளையாடும் பாடசாலைகள் இணைந்து தேசிய கனிஷ்ட பிரிவு அணிக் கான வீரர்களைப் போட்டிகளில் சிறப்பாக செயற்படுவதன் மூலம் அடையாளம் கண்டு தெரிவு செய்வார்கள்.

இதனடிப்படையில் 50 வருடங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து சிறந்த ஹொக்கி வீரர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய் யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கனிஷ்ட பிரிவு தேசிய ஹொக்கி அணிக்கு



முதலாவது தடவையாக யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்தும் யாழ். மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஹொக்கி வீரனாக இவர் தடம்பதித்துள்ளார்.

இதேவேளை, இடம்பெற்றுவரும் சுற்றுப்போட்டியில் இதுவரை விதுசனால் ஒரு கோல் பதிவு செய்யப்பட்ட நிலை யில் இந்த மாணவன் தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# 15 ஆவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமானது!

**(எஸ். நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 15 ஆவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஆரம்பமானது. இந்த வர்த்தகக் கண்காட்சி நாளை (25) மற்றும் நாளை மறுதினம் (26) ஆகிய தினங்களிலும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ரில்கோ தனியார் விருந்தினர் விடுதியில் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்று விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு வர்த்தக கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாண வர்த்தக தொழில்த்துறை மன்றத்தின் தலைவர் வாசுதேவன் ராசையா, யாழ்ப்பாண வர்த்தக தொழில்த்துறை மன்றத்தின் நிர்வாக இயக்குனர் கே.விக்னேஷ், அனுசரணையாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.
















# யாழ். மாவட்ட இணைய புதிய நிர்வாகம் தெரிவு!

(எஸ். நிதர்ஷன்)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய 34 ஆவது ஆண்டு பொதுக் கூட்டமும் நிகழ்வும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் புதன்கிழமை (22) யாழ். மாவட்ட சர்வோதய மாநாட்டு மண்டபத்தில் தலைவர் நடராஜா சுகிர்தராஜ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் க.பாஸ்கரனும் சிறப்பு விருந்தினரான தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிறுவுனர் வா.தியாகேந்திரனும் கலந்து கொண்டனர்.

இதில் தலைவராக ந.சுகிர்தராஜ், செயலாளராக க.ராகுலன், பொருளாளராக மோ.பிரியங்கா, உப தலைவராக ச.செந்தூராசா, உப செயலாளராக ம.தர்சினி, நிர்வாக உறுப்பினர்களாக க.ஜீவகமலதாஸ், க.முகுந்தன், ரி.சுமதி, ஏ.கோகுலன், பத்திராதிபராக கே. கோபாலகிருஸ்ணன் உள்ளிட்டோர் 2025 ஆம் ஆண்டுக்கான நிர்வாக குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# கொழும்பு - காங்கேசன்துறைக்கான ரயில் சேவைகளை அதிகரியுங்கள்!

## போக்குவரத்து அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் பாபுசர்மா

இலங்கையில் உள்ள ரயில் சேவைகளில் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் ரயில் சேவை கொழும்புக்கும் காங்கேசன் துறைக்குமான ரயில் சேவை ஆகும். அதேவேளை கூடுதலான ரயில் சேவைகளை ஈடுபடுத்தினால் மேலும் ரயில் சேவை மூலம் அதிக வருமானம் அரசு பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும். அத்துடன் இரவு தபால் சேவைக்கான ரயில் சேவையும் மக்களுக்கு மிகுந்த உதவியாக இருக்கும்.

இவ்வாறு சர்வதேச இந்துமத பீட செயலாளர் சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா போக்குவரத்து அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,



கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் வடபகுதிக்கன ரயில் சேவைகளை அதிகரிக்குமாறு பலர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.கல்கிசையில் இருந்து ஆரம்பிக்குமாறும் கேட்கின்றனர்.

எனவே மக்களின் நலன் கருதி செயற்படும் அநுர அரசு அடிப்படையான இந்தத் தேவையை நிச்சயம் நிறைவேற்ற வேண்டும். போக்குவரத்து அமைச்சருக்கு ஜனாதிபதி உரிய அறிவுறுத்தலகளைக் கொடுத்து இந்த வட பகுதிக்கான சேவைகளை கல்கிசையில் இருந்து காங்கேசன் துறைக்கான சேவைகளை நடத்த ஏற்பாடு செய்தால் ரயில் பயணிகளுக்கு மிகவும் இலக்காக இருக்கும்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகள் இது பற்றிய தேவைகளை கூறியிருந்தனர்.– என்றார்.





# கிண்ணியா குறிஞ்சாக்கேணி பால நிர்மாண பணி விரைவில்

## 10.5 மில்லியன் டொலர் ஒதுக்கீடு

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச சபை பிரிவில் உள்ள சுமார் ஒரு லட்சம் மக்களின் பயணங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு வசதியாக அமையும் குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாணப்பணிகளை மீள ஆரம்பிப்பதற்காக 10.5 மில்லியன் டொலர் நிதித்தொகை ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரதெனியா மற்றும் பதுளை செங்கலடி வீதியின் புனரமைப்பு வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையின் மீதியிருக்கும் பணத்தொகையை இதற்காக ஒதுக்க திருத்தப்பட்ட ஒப்பந்தம், நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன் மற்றும் சவூதி அபிவிருத்தி நிதிநயத்தின் பணிப்பாளர் அப்துல் மொசன் ஏ. அல்முல்லா ஆகியோர் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தப்பட்ட ஒப்பந்தம் மூலம் பதுளை செங்கலடி வீதி அபிவிருத்தித் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் எஞ்சிய பணம் வீதி வலையமைப்பு அபிவிருத்தி பணிகளுக்கு மாற்றப்பட்டு, குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்காக எதிர்பார்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம் நிர்மாணப்படுவதால் போக்குவரத்து பிரச்சினைகள் பல தீர்கப்படும் எனவும் எதிர்பார்கப்படுகிறது.



# அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா தேசிய பாடசாலை வெள்ளத்தில்!

(வி.ரி.சகாதேவராஜா)

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரி தேசிய பாடசாலை வெள்ளத்தில் முற்றுமுழுதாக சூழ்ந்துள்ளது.

இந்த நிலையில் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபம் நூலகம் உள்ளிட்ட பல கட்டடங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

பாடசாலையில் தாழ்நில பகுதி அனைத்து வகுப்பறைகளிலும், பாடசாலை நூலகம், பிரதான மண்டபம் என்பன நீரில் மூழ்கி காணப்படுகின்றன.

திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் இது தொடர்பில் அறிவித்துள்ளோம் என்று பாடசாலை அதிபர் டேவிட் அமிர்தலிங்கம் தெரிவித்தார்.





# சுவாமி விவேகானந்தரின் 163 ஆவது ஜனன தினம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

ஸ்ரீ இராமகிருஸ்ண மிசனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரது 163 ஆவது ஜனன தின விழா மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாத வானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் ஜெயந்தி விழா கொடியேற்றத்துடன் நடைபெற்றது.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்சர் ஆலயத்தில் இடம்பெற்ற ஜெயந்தி விழாவில் அதிகாலை 5 மணியளவில் மங்கள ஆரத்தி சுப்ரபாதம் என்று ஆரம்பித்து ஆலய வலம், ஹோமம், பஜனை, சொற் பொழிவுடன் சுவாமி விவேகானந்தர் பஜனை பாடல்கள் இசைக்கப்பட் டன.





**3 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட**

# களுதாவளை பொருளாதார நிலையத்தை ஏழு வருடங்களின் பின்னர் திறக்க ஏற்பாடு!

**( வி.ரி.சகாதேவராஜா)**

3 கோடி ரூபா செலவில் நிருமாணிக் கப்பட்ட களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தை ஏழு வருடங்களின் பின் திறந்துவைக்க ஏற்பாடு நடை பெறுகிறது.

மட்டக்களப்பு - களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தை மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைப்பது தொடர்பான கலந்துரையாடல் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த 2018 ஆம் ஆண்டு கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சால் நிர்மாணிக்கப்பட்ட களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தை மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்துவைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் அரச அதிபரும் முகாமைத்துவ சபையின் தலைவரு மான திருமதி ஜே. ஜே. முரளிதரன் தலைமையில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற் றது.

இதன்போது பொருளாதார மத்திய நிலையத்துக்கான முகாமைத்துவ பொறுப்பு சபையின் கலந்துரையாடல் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களது மரக்கறி வகைகள், பழவகைகள் மற்றும் உள்ளூர் உணவு உற்பத்திப் பொருள்கள் போன்றவற்றை நியாய விலையில் பெற்று, அதனை பொது மக்களுக்கு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பித்துவைப்பது தொடர்பாகவும், களுதாவளை பொருளா தார மத்திய நிலையத்தின் அவசியம் பற்றியும் ஆராயப்பட்டது.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் முப்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஐம்பது கடைத் தொகு திகளை கொண்டதாக இப் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த கலந்துரையாடலில் கடைத்தொ குதிகளை பெற்றுக்கொள்வதற்காக ஆர்வம் காட்டியிருந்த உற்பத்தியாளர் களும், கலந்து கொண்டனர். பொரு ளாதார நிலையத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், உற்பத்திப் பொருள் களைச் சந்தைப்படுத்தல் மற்றும் கொள்வனவு செய்தல் மற்றும் சவால்கள் பற்றியும் கருத்துக்களைத் தெரிவித்தி ருந்தனர்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணி தரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். நவநீதன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ரீ. நிர்மல்ராஜ், பிரதேச சபையின் செயலாளர் எஸ். அறிவழகன், விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கே. ஜெகநாத், மாவட்ட செயலக விவ சாய பணிப்பாளர் எம்.எப்.ஏ சனீர், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி. அபேவிக்கிரம, களு வாஞ்சிகுடி வர்த்தக சங்க தலைவர், கமநல அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 19 ஆவது வருட நினைவேந்தல் திருமலையில்

(எஸ்.கீதபொன்கலன்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 19 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை உவர்மலை கீழ் வீதியில் (ஆளுநர் செயலக வீதி) உள்ள உவர்மலை பூங்காவில் மதியம் 2.40 மணிக்கு அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், திருகோணமலை ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார்,வவுனியா,முல்லைத்தீவு ஊடக மன்றங்கள் மற்றும் இலங்கை தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டிலும், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஒத்துழைப்புடனும் இடம்பெற்ற

இந்நிகழ்வில் வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சுகிர்தராஜனின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

திருகோணமலை துறைமுகத்தில் கடமையாற்றி வந்த சுகிர்தராஜன் தனது தொழில் காரணமாக திருமலையில் தங்கியிருந்தமையோடு ஊடகவியலாளராகவும் பணியாற்றி வந்தார்.

வீரகேசரி பத்திரிகையில் எஸ்.எஸ்.ஆர், மனோ, ரஹ்மான் ஆகிய பெயர்களிலும் மெற்றோ நியூஸ் பத்திரிகையில் ஈழவன் என்ற பெயரிலும் சுடர் ஒளி, உதயன் பத்திரிகைகளிலும் செய்திகள் மற்றும் அரசியல் பத்திகளையும் எழுதி வந்தார்.

இந்நிலையில் 24.01.2006 அன்று காலையில் வேலைக்கு செல்வதற்கு பஸ்ஸுக்குக் காத்திருக்கும் போது ஆளுநர் செயலகத்திற்கு முன்புறம் உள்ள வீதியில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலை கடற்கரையில் வைத்து, பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியிருந்த ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை உலகிற்கு வெளிச்சம்போட்டுக் காட்டியிருந்தார். இதன் காரணமாக அவர் குறிவைக்கப்பட்டிருந்தார். குறிப்பாக குறித்த ஐந்து மாணவர்களின் இறப்புக்கு கைக்குண்டு தாக்குதலே காரணம் எனக் கூறி விசாரணையை திசைதிருப்ப முயற்சி செய்த நேரத்தில் ஊடகவியலாளர் சுகிர்தராஜன் மிகவும் துணிச்சலுடன் செயற்பட்டு சுட்டுகொல்லப்பட்ட மாணவர்களின் சூட்டுக் காயங்களை நுட்பமாக படமெடுத்து குறித்த மாணவர்கள் தலையில் துப்பாக்கியால் சுடப்பட்டே இறந்துள்ளனர், அவர்களின் தலையில் உள்ள காயங்கள் கைக்குண்டு தாக்குதலால் ஏற்பட்டவை அல்ல, அவை துப்பாக்கிக் குண்டுகளால் ஏற்படுத்தப்பட்டவை என்பதை உலகிற்கு வெளிக்காட்டியிருந்தார்.

மட்டக்களப்பு – குருமண்வெளியில் பிறந்த சுப்பிரமணியம் சுகிர்தராஜன் மிதுசா(23), சதுர்சன்(21) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். இவரது துணைவியார் சென்ற ஆண்டு காலமானார்.









தமிழ் சமூகத்தின் ஊடகப் போராளியாக செயற்பட்ட சுகிர்தராஜன் 36 வயதில் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இவரது இழப்பு தமிழ் ஊடக சமூகத்திற்கு மட்டுமல்ல அவரின் குடும்பத்திற்கும் பேரிழப்பாகும்.

# தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க முடிவு

## மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் நடவடிக்கை

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மஸ்கெலியா மவுசாக்கலை தோட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட எட்டு குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் குழந்தைகளுக்கும் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் அனர்த்த நிவாரண உதவித் திட்டத்தின் ஊடாக தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் ஏ. சிவஞானம், உப தலைவர் ஆர்.விஸ்வநாதான் ஆகியோர் தலைமையில் மன்றத்தின் உறுப்பினர்கள் எதிர்வரும் ஞாயிறுக்கிழமை நேரில் சென்று பதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரணப் பொருள்களைக் கையளிக்கவுள்ளனர்.

தீ விபத்தில் உடைமைகளை இழந்தும், அத்தியாவசியப் பொருள்களை பறிகொடுத்தும், அகதிகளாக தங்கியுள்ள மக்களுக்கு பிரதேச நலன் விரும்பிகளின் அவசர வேண்டுகோளுக்கிணங்க அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் சமையல் பாத்திரங்கள், உடுதுணிகள், மருந்து வகைகள் மற்றும் உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

தீ விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், புத்தகப் பைகள், பாதணிகள், சீருடைத் துணிகள் முதலான உதவிகளும், குழந்தைகளுக்கு 6 மாதங்களுக்குத் தேவையான பால்மா வகைகள், உடைகள் முதலானவற்றையும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# சமரசமற்ற பேனாப் போராளி ராவய விக்டர் ஐவன்...!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா



**(இறுதிவரை மிகுந்த பரபரப்பான சர்ச் சைக்கு உரிய ஊடகவியலாளராகத் திகழ்ந்த விக்டர் ஐவன், தமிழ் பேசும் மக்களின் தேசிய சுய நிரணய உரிமைப் போராட்டத்தை அங்கீ காரம் செய்யா விடினும், தனது இனத்தின், ஆளும் அரசுகளின் கொடுஞ் செயல்களை எதிர்த்துக் குரல் கொடுத்து வந்தார்.**

**தற்போது ஆளும் தேசிய மக்கள் சக்தியின் முன்னைய ஜேவிபியின் ஆரம்பகால மிக முக்கியஸ்தரான விக்டர் ஐவன் (பொடி அத்துல - *(Victor Ivan)*) கண்டுகொள்ளப்படாத பேனாப் போராளி யாக மரணித்துள்ளார்.)**

1971 ஆண்டு ஜே.வி.பியின் நாடு தழுவிய கிளர்ச்சியின் போது கொழும்பு மாவட்டத்துக்கான கிளர்ச் சிக் குழுவின் பொறுப்பாளராக செயற் பட்டவர் விக்டர். அவர் பிற்காலத்தில் ஜே.வி.பியுடன் கருத்து வேறுபாடு காரணமாக அதிலிருந்து வெளியேறி சுயாதீன பத்திரிகையாளராக செயற் படத் தொடங்கினார்.

"ராவய" என்ற சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராக அதன் தொடக்க காலத்திருந்து நீண்ட காலம் பணியாற்றியவர். நாட்டில் நடக்கும் ஊழல்களையும் தவறுகளை யும் அம்பலப்படுத்த உறுதிபூண்ட சர்ச்சைமிகு பத்திரிகையாக ராவய யாவை வளர்த்தெடுத்தார்.

ஜேவிபியின் மூத்த உறுப்பினர்

இறக்கும் போது அவருக்கு வயது 75. முதலாவது 1971 கிளர்ச்சியின் போது ஜேவிபியின் மூத்த உறுப்பி னராக இருந்த அவர், பொடி அத்துல என்று அழைக்கப்பட்டிருந்தார். உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த பத்தி, செய்தித்தாள் எழுத்தாளரும், ராவயவின் ஆசிரியர் விக்டர் ஐவன் கராபிட்டிய மருத்துவமனையில் 19.01.2025 இல் காலமானார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் ஆட்சியில் இருந்த அரசுகளு டன் எப்போதும் சர்ச்சைக்கு உரிய பத்திரிகையாளராக விளங்கினார்.

தற்போது ஆளும் கட்சியில் முன்பு முக்கிய பொறுப்பில் இருந்தவர் இந்த விக்டர் ஐவன். ஆயினும் கடந்த ஆண்டு அவரது பத்திரிகையான ராவய நிறுவகத்தை இவரால் விற் பனை செய்யவோ, இடமாற்றம் செய் யவோ, வாடகை அல்லது குத்த கைக்கு விடவோ, இடிக்கவோ, அதன் வழியாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அகற்றவோ, செய் தித்தாள் வெளியிடவோ கூடாது என கட்டாய தடை அறிவிப்புடன் கூடிய பல தடை உத்தரவுகளை விக் டர் இவான் எதிர்கொண்டு நீதிமன் றத்தால் எச்சரிக்கப்பட்டார்.

ராவய பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய விக்டர் ஐவன் 1949 ஜூன் 26ஆம் திகதி பிறந்தவர். கட்டு கஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். பத்திரிகை மற்றும் ஊடக சுதந்திரத்திற்கான அவரது அர்ப் பணிப்பு அவருக்கு பரவலான மரியா தையைப் பெற்றுத் தந்தது.

"ராவய" பத்திரிகை தொடங்கப்பட் டதிலிருந்து தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணி யாற்றினார். விக்டர் ஒரு புலனாய்வு பத்திரிகையாளர், அரசியல் விமர்சகர், கோட்பாட்டாளர், சமூக ஆர்வலர் மற்றும் பல புத்தகங்களையும் எழுதி யுள்ளார்.

அச்சமற்ற செய்தியாளர்

1971 இளைஞர் கிளர்ச்சி தொடர் பான பிரதான நீதிமன்ற வழக்கில் அவர் 7ஆவது குற்றவாளியாக இருந் தார். சந்தேகத்துக்கு உரிய அனைத்து பிரதிவாதிகளிலும் மிகவும் வண்ண மயமான நபர் என்று நீதிபதிகள் குழு அவரை விவரித்தது. விசாரணையின் முடிவில் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சிறைவாசத்தின்போது அவர் ஜே.வி.பியின் கோட்பாட்டையும் மார்க்ஸியத்தின் கோட்பாட்டையும் கைவிட்டார். வன்முறைக் கோட் பாட்டை நிராகரித்த அவர், மகாத்மா காந்தி விளக்கிய அகிம்சை தத்து வத்தை ஏற்றுக்கொண்டு அதனைத் தீவிரமாகப் பின்பற்றுபவராக மாறி னார்.

ஸ்ரீலங்காவில் இனவாதம் தலை தூக்கி, சிங்கள அரசுகளால் வட கிழக்கில் தமிழர்கள் மீதான வன் முறைகள் வெடித்ததால் நாடு கொந் தளிப்பில் இருந்த 1986 ஆம் ஆண்டு விக்டர் ஐவன் பத்திரிகைத் துறையில் நுழைந்தார்.

அவர் தொடங்கிய 'ராவய' என்ற மாத இதழ் விரைவில் வாசகர்களி டையே பிரபலமடைந்து, அந்த நேரத் தில் அதிக தேவை கொண்ட பத்திரி கையாக மாறியது. இந்த பத்திரிகை ஊடாக அவர் பல்வேறு உண்மைகளை வெளிக்கொணர்ந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அச்சமற்ற செய்தி அறிக்கையிடல் மற்றும் கூர்மையான வர்ணனைக்கு பெயர் பெற்ற இவர், இலங்கை ஊடகங்களில் ஒரு முக்கிய நபராக தனது இடத்தை உறுதிப்படுத்தியி ருக்கிறார்.

புலிகளுடன் சமாதான பேச்சின் முன்னோடி

மூத்த பத்திரிகையாளர் விக்டர் இவான் 1993 ஆம் ஆண்டு யாழ். குடா முழுமையாக புலிகளின் கட்டுப்பாட் டில் இருந்த சமயம் யாழ்ப்பாணத்திற்கு துணிந்து பலதடவைகள் விஜயம் செய்தவர்.

அத்துடன் 1994 - சந்திரிக்கா குமார ணதுங்க ஆட்சிபீடம் ஏறுவதற்கு மிக முக்கியமான மூளையாக, சூத்திர தாரியாக செயற்பட்ட ஊடகவியலாளர் இவர் விளங்கினார்.

புலிகளுடன் சமாதான பேச்சுக் களை ஆரம்பிக்க வேண்டும் என்று சந்திரிக்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்தவர்களில் இவரும் முக்கிய மான ஒருவர்.

ஆரம்பத்தில் சந்திரிக்கா அரசை அனுசரித்துப் போனாலும், பின்னர் அவர் கடுமையாக விமர்சித்தார்.

அக்காலத்தில் அவர் எழுதிய பிரபலமான புத்தகங்களில் ஒன்று *"The Queen of Deceit"* என்பதாகும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவினது ஆட்சிக் காலம் குறித்த சர்ச்சை தரும் புத்தகமாக வெளியாகியது.

சிங்கள ஊடகங்களில் இறுதிவரை மிகுந்த பரபரப்பான சர்ச்சைக்குரிய ஊடகவியலாளராகத் திகழ்ந்தவர். இலங்கைத் தீவில் நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் பேசும் மக்களின் தேசிய சுய நிரணய உரி மைப் போராட்டத்தை அவர் அங் கீகாரம் செய்யவில்லை.

ஆயினும் ஆளும் அரசுகளுடன் சமரசமற்று முரண்பட்டு போராடினார். தனது இனத்தின் கொடுஞ் செயல் களை எதிர்த்து குரல் கொடுத்து வந்தார் என்பதும் வரலாற்று உண் மையாகும்.

சிங்கள பத்திரிகை உலகின் இன் னோர் ஜம்பவான் விடைபெற்று உள் ளார். சக மொழி பத்திரிகையாளர்களை நேசத்துடன் பழகிய, சமரசமற்ற பேனாப் போராளியான 'ராவய' புகழ் விக்டர் ஐவனுக்கு எம் ஆத்மார்த்த அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

# அரவிந்த் கெஜ்ரிவாலின் பாதுகாப்பை திரும்பப் பெற்றது பஞ்சாப் பொலிஸ்

டில்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு வழங்கிய பாதுகாப்பை பஞ்சாப் பொலிஸ் நீக்கியுள்ளது.

கெஜ்ரிவாலுக்கு பஞ்சாப் மாநில பொலிஸ் வழங்கும் பாதுகாப்பைத் திரும்பப் பெற உத்தரவிட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் டில்லி பொலிஸ் முறைப்பாடு அளித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து கெஜ்ரிவாலுக்கு வழங்கி வரும் பாதுகாப்பை பஞ்சாப் மாநில பொலிஸ் திரும்பப் பெற்றுள்ளது. டில்லி மாநில சட்டமன்ற தேர்தல் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான தேர்தல் பிரசாரத்தில் ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், டில்லியின் முன்னாள் முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால் ஈடுபட்டு வரும் நிலையில், அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தானுடன் மீண்டும் வர்த்தகத்தை ஆரம்பிக்கும் பேச்சு நடத்தப்படவில்லை

## எஸ்.ஜெய்சங்கர் தெரிவிப்பு



பாகிஸ்தானுடன் மீண்டும் வர்த்தகத்தை தொடங்குவது குறித்து எந்த பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜெய்சங்கர் செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுக்கு பிறகு, பாகிஸ்தானுடன் வர்த்தகம் குறித்து எந்த பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை.

இந்தியா, பாகிஸ்தானுடனான வர்த்தகத்தை ஒருபோதும் நிறுத்தவில்லை, மேலும் இது தொடர்பான முடிவு 2019 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது என தெரிவித்தார்.

ஆரம்பத்தில் இருந்தே, இந்தியா மிகவும் விருப்பமான நாடு என்ற அந்தஸ்தைப் பெற வேண்டும் என்பதே ஆர்வமாக இருந்தது எனவும் பாகிஸ்தானுக்கு இந்தியா அந்த அந்தஸ்தை வழங்கிய போதிலும் பாகிஸ்தான் இந்தியாவிற்கு அதே அந்தஸ்தை வழங்கவில்லை என்றும் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

# ஆண்களும் கொடுமையை எதிர்கொள்கின்றனர்; விவாகரத்து வழக்கில் நீதியரசர் அதிரடி கருத்து

விவாகரத்து வழக்குகளில் ஆண்களும் கொடுமையை எதிர்கொள்கின்றனர் என கர்நாடக உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கர்நாடகா மாநிலத்தில் பெண் ஒருவர் தமது விவாகரத்து வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனு மீதான விசாரணையின் போது, சமூகத்தில் பாலின நடுநிலையின் அவசியத்தை வலியுறுத்தி, விவாகரத்து வழக்கை மாற்றக் கோரிய அந்தப் பெண்ணின் மனுவை கர்நாடக உயர்நீதிமன்ற நீதியரசர் நிராகரித்துள்ளார்.

ஒரு பெண் தாக்கல் செய்ததால் மட்டுமே இந்த இடமாற்ற மனுவை ஏற்க முடியாது என்றும், உண்மைகளின் சமநிலையான மதிப்பீடு தேவை என்றும் நீதிமன்றம் வலியுறுத்தியது.

பெரும்பாலான சூழ்நிலைகளில் பெண்கள் முதன்மையாக பாதிக்கப்பட்டவர்களாக இருப்பினும் அதற்காக பெண்களின் கொடுமையால் ஆண்கள் பாதிக்கப்படுவதில்லை என்று அர்த்தமல்ல என சுட்டிக்காட்டியுள்ளார்.

"சமத்துவம் அதன் உண்மையான அர்த்தத்தில் இருக்க வேண்டும், இரு பாலினத்தையும் பாதிக்கக்கூடாது. பெண்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் எவ்வளவு பாராட்டத்தக்கதாக இருந்தாலும், சமூகத்தில் ஆண்கள் எதிர்கொள்ளும் சவால்களை கவனிக்காமல் விடக்கூடாது," என்று நீதியரசர் குறிப்பிட்டுள்ளார்.




இதன் விளைவாக, வழக்கை மாற்றினால் பிரதிவாதி அதிக சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று கண்டறிந்து நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்துள்ளது.



# 100 மைல் வேகத்தில் இயோவின் புயல்; பிரித்தானிய வானிலை மையம் எச்சரிக்கை

பிரித்தானிய மக்களுக்கு பிரித்தானிய வானிலை ஆய்வு மையம் அவசர எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்தநிலையில், மணிக்கு 100 மைல் வேகத்தில் இயோவின் புயல் வீசக்கூடும் என்பதால் பொதுமக்களை அவதானமாக செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 100 ஆண்டுகளில் இது போன்ற ஒரு புயல் பிரித்தானியாவில் ஏற்படவில்லை என வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், ஸ்கொட்லாந்தில் நாளை ரயில் சேவைகள் நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ரயில் பயணிகளுக்கு மாற்று போக்குவரத்து சேவைகள் இருக்காது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பிரித்தானியாவின் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் முழுவதும் மஞ்சள் மற்றும் அம்பர் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

ஸ்கொட்லாந்தின் தலைநகரில் உள்ள பாடசாலைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் பூங்காக்கள் நாளை மூடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புயல் காரணமாக நாளை அயர்லாந்துக்குச் செல்லும் விமானங்களும் இரத்து செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் மனைவியை கொன்று குக்கரில் வேக வைத்த இராணுவவீரர்

இந்தியாவில் மனைவியை கொலை செய்து உடல் பாகங்களை வெட்டி குக்கரில் வேகவைத்த முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் முன்னாள் இராணுவ வீரர் குருமூர்த்தி என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபருக்கு திருமணமாகி 13 ஆண்டுகளான நிலையில் இரு பிள்ளைகள் இருக்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், இராணுவ வீரருக்கும் அவரது மனைவியிற்கும் அடிக்கடி குடும்ப தகாராறுகள் ஏற்பட்டு வந்த நிலையில் கடந்த சில நாள்களாக தனது பெண்ணை காணவில்லை என உயிரிழந்த பெண்ணின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இதையடுத்து, உயிரிழந்த பெண்ணின் கணவனை கைது செய்த பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்திய போது அவர் தெரிவித்த விடயம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

அதாவது, சம்பவ தினம் தனது மனைவியுடன் வாக்குவாதம் முற்றியமையினால் மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்து உடலை வெட்டி துண்டுகளாக்கி குளிர்சாதனபெட்டியில் வைத்துள்ளார் என தெரிவித்துள்ளார்.



இதையடுத்து, யூடியூப் மற்றும் ஆங்கில திரைபடங்களை பார்த்து எலும்புகளை கரைப்பது எப்படி என கற்றதாகவும், சோதனை முயற்சியாக தெரு நாய் ஒன்றை கொன்று குக்கரில் வேகவைத்து வெயிலில் காயவைத்து பொடிப்பொடியாக்கி கால்வாயில் கரைத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இதனை போலவே தனது மனைவியின் உடல் பாகங்களை குக்கரில் வேகவைத்து பொடிப்பொடியாக்கி, கால்வாயில் கரைத்ததோடு மீதம் உள்ள எலும்புகளை ஏரியில் வீசியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் உலகளவில் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதுடன் சமூக வலைதளம் உட்பட ஊடகங்களிலும் கடும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 23/01/2025


## கனடாவில் நெட்பிலிக்ஸ் கட்டணங்கள் அதிகரிப்பு

ஒன்லைன் ஸ்ட்ரீமிங் நிறுவனமான நெட்பிலிக்ஸ், கனடாவில் கட்டணங்களை அதிகரிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் ஆகக் குறைந்த மாதாந்த சந்தாக் கட்டணம், 02▶



# மூலதன ஆதாய வரி நீக்கப்படும்: கிறிஸ்டியா ஃப்ரீ லேண்ட் தகவல்

**லிபரல் கட்சியின் தலைமை பதவிக்கு தம்மை நியமித்தால் மூலதன ஆதாய வரி நீக்கப்படும் என முன்னாள் அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீ லேண்ட் தெரிவித்துள்ளார்.**

**பிரதமர் ஜஸ்டின் டரூடோ லிபரல் கட்சியின் தலைமை பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.**

**இதன் படி லிபரல் கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்பவர் பிரதமராகவும் பதவி வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.**

பொது தேர்தல் நடத்தப்படும் வரையில் லிபரல் கட்சியின் தலைவர் பிரதமராக பதவி வகிக்க உள்ளார்.

இந்த நிலையில், தமக்கு கட்சியின் தலைமை பொறுப்பு வழங்கப்பட்டால் மூலதன ஆதாய வரியை ரத்து செய்வதாக ஃப்ரீ லேண்ட் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சராக கடமை ஆற்றிய காலத்தில் மூலதன ஆதாய வரி அத்தியாவசியமானது என ஃப்ரீலேண்ட் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ரூடோவின் அரசாங்கத்தில் ப்ரீலேண்ட் நிதி அமைச்சராக கடமை ஆற்றியிருந்தார். கனடிய மக்களின் முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த வரியை ரத்து செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கனடாவில் ஏற்பட்ட தீ விபத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது

கனடாவில் 10 மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்ட தீ விபத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


கனடாவின் மிஸ்ஸிசாகாவில் பகுதியில் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றில் பாரியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

இந்த தீ விபத்து காரணமாக சுமார் பத்து மில்லியன் டொடர்கள் நட்டம் சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர் 02▶







# சீரற்ற கால நிலை காரணமாக ரயில் போக்குவரத்து பாதிப்பு

கனடாவில் சீரற்ற காலநிலை காரணமாக ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ரொறன்ரோ நகரின் லைன் 1 சுரங்கப் பாதை ரயில் போக்குவரத்து சேவைகள் கடும் குளிர் காரணமாக இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோ பொது போக்குவரத்து சேவைக்கு சொந்தமான ரயில் சேவைகளை இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ரயில்களை பழுது பார்ப்பதற்காகவும் இவ்வாறு ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வில்சன் மற்றும் லோரன்ஸ் மேற்கு ரயில் நிலையங்களுக்கிடையிலான சேவை இடைநிறுத்தப்பட்டது.

இந்த இரண்டு ரயில் நிலையங்களுக்கிடையில் விசேட பஸ் சேவை முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சில இடங்களில் ரயில் சேவைகள் காலதாமதமானதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

ரொறன்ரோவில் கடுமையான குளிருடனான காலநிலை நிலவி வருகின்றது. ரொறன்ரோவின் வெப்பநிலை மறை 18 பாகை செல்சியஸாக காணப் பட்டதாகவும் குளிர் காற்று நிலைமை யினால் இந்த வெப்பநிலை சுமார் மறை 28 பாகையாக உணரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கனடாவில் ஏற்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடைய சந்தேகத்தின் பேரில் 29 வயதான நபரே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் தீ விபத்தினால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வர்த்தக நிலையத்திற்கு பாரிய அளவில் நட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ விபத்துக்கான காரணங்கள் என்ன என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தற்போது சந்தேகத்திற்கிடமான சில விடயங்கள் கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் டைமண்ட் ஹார்பர் என்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை மீறி செயல்பட்டதாக மேற்படி சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ விபத்து தொடர்பில் தகவல்களை வழங்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை எடுக்கப்பட்டது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளம்பரங்களுடன் கூடிய நிலையான திட்டம் - மாதத்திற்கு 2 டொலர்களிலிருந்து 7.99 டாலர்களாக அதிகரிக்கப்படவுள்ளது.

விளம்பரங்கள் இல்லாத நிலையான திட்டம் மாதத்திற்கு 2.5 டொலர்களிலிருந்து அதிகரித்து 18.99 டொலர்களாக அதிகரிக்கப்பட உள்ளது.

அதே நேரத்தில் பிரீமியம் திட்டம் மாதத்திற்கு 3 டொலர்களிலிருந்து 23.99 டொலர்களாக உயர்வடையும் என தெரிவிக்கப்படுகின்றது. கூடுதல் உறுப்பினரைச் சேர்ப்பதற்கான கட்டணத்தில் எந்த மாற்றமும் இல்லை.

புதிய விலைகள் புதிய சந்தாதாரர்களுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும், அதே நேரத்தில் ஏற்கனவே உள்ள உறுப்பினர்கள் தங்கள் அடுத்த மாத பட்டியலில் விலை மாற்றம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.




நிகழ்ச்சிகளுக்கான முதலீடுகள் காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக பங்குதாரர்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, போர்த்துகல் மற்றும் அர்ஜென்டினாவில் உள்ள பெரும்பாலான திட்டங்களில் கட்டணங்களை மாற்றி வருவதாக Netflix அறிவித்துள்ளது.




# கனேடிய சந்தையில் கார்களின் விலையை உயர்த்தும் டெஸ்லா!

டெஸ்லா (Tesla) நிறுவனம் எதிர்வரும் பெப்ரவரி 1 முதல் கனேடிய சந்தையில் கார்களின் விலையை உயர்த்துவதாக அறிவித்தது.

இது நுகர்வோரை கணிசமாக பாதிப்படைய செய்யும் அறிவிப்பாகும்.

குறிப்பாக டெஸ்லாவின் மொடல் 3 க்கான விலைகள் 9,000 கனேடிய டொலர்கள் ($6,254.78) வரை அதிகரிக்கலாம்.

அதே நேரத்தில் மொடல் Y வகைகளின் விலைகள் 4,000 கனேடிய டொலர்கள் வரை உயரும். மொடல் S மற்றும் X இன் அனைத்து வகைகளும் 4,000 கனேடிய டொலர்களாக உயரும் என்றும் கூறப் பட்டுள்ளது.

பில்லியனர் எலோன் மாஸ்க் தலைமையிலான டெஸ்லா நிறுவனம் விலை உயர்வுக்கான காரணத்தை இதுவரை வெளியிடவில்லை.

நிறுவனம் கனடாவில் கார்களை உற்பத்தி செய்வதில்லை மற்றும் பிற தொழிற்சாலைகளில் இருந்து இறக்குமதி செய்கிறது.

டெஸ்லா தனது ஷாங்காய், சீனா தொழிற்சாலை மற்றும் அமெரிக்காவில் உள்ள அதன் ஆலைகளில் இருந்து கனடாவுக்கு எத்தனை கார்களை ஏற்றுமதி செய்கிறது என்பது உடனடியாக வெளிப்படுத்தவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடா மற்றும் மெக்சிகோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு பெப்ரவரி 1 ஆம் திகதி 25 வீதம் வரி விதித்தால் அதற்கு பதிலளிக்க தயாராக இருப்பதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த செவ்வாயன்று மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் விலைகளை கணிசமாக அதிகரிக்கும் டெஸ்லாவின் அறிவிப்பு வந்துள்ளது.

ஷாங்காயில் தயாரிக்கப்படும் டெஸ்லா கார்கள் உட்பட சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மின்சார வாகனங்களுக்கு கனடா ஏற்கனவே 100 வீதம் வரி விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் இடம்பெற்ற விபத்தில் தந்தையும், மகளும் உயிரிழப்பு





கனடாவில் இடம் பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தந்தையும் , மகளும் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில், யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியை பூர்வீகமாக கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்து வருபவருமான புஸ்பராஜா பகீரதன் (வயது 40) அவரது மகளான பகீரதன் றியானா (வயது 03) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

கனடாவில், அதிவேக நெடுஞ்சாலையில் வாகனத்தில் தந்தையும் மகளும் பயணித்துக்கொண்டிருந்த போதே விபத்து இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து, காயமடைந்த தனது மகளை விபத்துக்கு உள்ளான வாகனத்தில் இருந்து மீட்டு, அதிவேக நெடுஞ்சாலையை கடக்க முற்பட்டுள்ளனர்.

இதன்போது , மற்றுமொரு வாகனம் அவர்கள் மீது மோதியதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் தந்தையும், மகளும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் மூன்று வாகனங்கள் தொடர்புபட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் கனேடிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.